[1997 அக்டோபர் 13

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் க. கிருஷ்ணசாமி

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. தங்கவேல் மற்றும் மாண்புமிகு அமைச்சர் திரு. தங்கபாண்டியன் ஆகியோருடைய மறைவிற்கு நான் சார்ந்து இருக்கின்ற இயக்கத்தின் சார்பாக என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். அமைச்சர் தங்கபாண்டியன் அவர்களை, 1976-ஆம் ஆண்டு நான் மருத்துவக் கல்லூரி மாணவனாக இருந்தபோது, அவசரநிலைப் பிரகடனத்திலே, மதுரை சிறையிலே இருந்த காலத்திலேயே அவருடன் பழகியவன்; அன்றிலிருந்தே கடந்த 20 ஆண்டு காலத்தில் பல முறை சந்தித்து இருக்கிறேன். அவர் பழகுவதற்கு இனிமையானவர்; அன்புள்ளம் கொண்டவர். அவருடைய மறைவிற்கும், அவருடைய மறைவால் வாடுகின்ற அவருடைய இல்லத்தாருக்கும், அவருடைய இயக்கத்திற்கும் என்னுடைய மனமார்ந்த இரங்கலை மீண்டும் ஒருமுறை உரித்தாக்குகின்றேன்.

அதேபோல, நம்முடைய கண் முன்னாலே அருட்தொண்டராக விளங்கிய அன்னை தெரசா அவர்களின் மறைவிற்கும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவை இரண்டு தங்கங்களை இழந்து இருக்கிறது. ஒன்று தங்கபாண்டியன், மற்றொன்று தங்கவேல். தங்கவேல் அவர்கள் நீலகிரி மாவட்டம் குன்னூர் தொகுதியிலே இருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்த அவையில் அவருடைய தொகுதி மக்களுக்காவும் தமிழ்நாட்டு மக்களுக்காகவும் குரல் கொடுத்தவர். மிகச் சாதாரணமான குடும்பத்தில் பிறந்து, தமிழகத்திலேகூட அல்ல, இலங்கையிலே பிறந்து, தமிழகத்திலே வாழ்ந்து, தமிழக மக்களோடு ஒன்றிக்கலந்து, குறிப்பாக குன்னூர் தொகுதி மக்களுடைய சேவகனாக, பணியாளனாக, உத்தம ஊழியனாக அருந்தொண்டாற்றியவர்.

அவருடைய மறைவால் துடித்துத் துவண்டு இருக்கின்ற அந்தக் குடும்பத்தாருக்கு இந்த அவையின் சார்பில் செலுத்தப்படுகின்ற இரங்கலில் நானும் என்னுடைய இதயத்தை இணைத்துக் கொள்கின்றேன்.

மற்றொரு அதிர்ச்சியாக, இந்த அவையில் அமைச்சராக வீற்றிருந்தவர், என்னுடைய தம்பிகளிலே ஒருவராக இடம் பெற்றிருந்தவர், இந்த இயக்கத்தின் தளபதியாகக் கடமையாற்றியவர், கழகம் கட்டளை இட்டபோதெல்லாம் களம் சென்றவர், குறிப்பாக நெருக்கடி காலத்திலே மிசா கைதியாக ஓராண்டு காலம் அடைபட்டு அடக்குமுறையை ஏற்றவர், தங்கபாண்டியன் அவர்கள். இங்கே உரையாற்றிய எல்லாக் கட்சிகளினுடைய தலைவர்களும் எடுத்துக் காட்டியதைப் போல, எல்லோருக்கும் இனியவராக, நல்லவராக, அதே நேரத்தில் கொள்கையை நிலைநாட்டுவதிலே வல்லவராக விளங்கியவர்.

முற்பகல் 10-20

அவர், தனக்குத் தரப்பட்ட பொறுப்புக்களை ஏற்று ஆர்வத்தோடு நிறைவேற்றினார் என்பதற்கு அடையாளமாகத்தான், அவருடைய மறைவு கூட அமைந்துவிட்டது என்று சொன்னால், அது மிகையாகாது. அனைவரும் இங்கே சுட்டிக்காட்டியதற்கொப்ப, தமிழகத்திலே விரும்பத்தகாத அளவுக்கு நடைபெற்ற ஜாதி விரோதக் கலவரங்களை நேரிலே சென்று சமாதானப்படுத்தி, அமைதிப்படுத்துவதற்காக, அவர் அந்தப் பொறுப்பினை ஏற்று, அந்த மாவட்டங்களிலே சுற்றுப்பயணம் செய்து கொண்டிருந்தபோதுதான் நம்மைவிட்டு அவர் மறைய நேரிட்டது.

இவ்வளவு விரைவில் அவர் நம்மைவிட்டுப் பிரிவார் என்று யாருமே எதிர்பார்த்ததில்லை. இனிய பண்புகளுக்குச் சொந்தக்காரர்; அவர் பெரிய குடும்பம் ஒன்றிலே பிறந்தவர்; செல்வச் சீர்மிக்கக் குடும்பத்திலே பிறந்தவர் என்றாலும் கூட, ஏழைகளின் தோழனாகத்தான் அவர் இறுதிநாள் வரை வாழ்ந்தார் என்பதை எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். அத்தகையவரை இழந்து தவிக்கின்ற அவருடைய குடும்பத்தாருக்கு நான் இந்த அவையின் சார்பிலும், என் சார்பிலும் என்னுடைய ஆழ்ந்த துயரத்தை, இரங்கலை வெளிப்படுத்திக்கொள்கின்றேன்.

[கலைஞர் மு. கருணாநிதி] [*1997* அக்டோபர் *13*

இன்று தங்களால் எடுத்துவைக்கப்பட்ட இரங்கல் குறிப்புகள் மற்றும் இரங்கல் தீர்மானம் இவற்றில், அன்னை தெரசா அவர்களைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கின்றீர்கள். அதைப்போல, பதினொரு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் நம்மைவிட்டு மறைந்தது பற்றியும் குறிப்பிட்டு இருக்கின்றீர்கள். இவர்களிலே, குறிப்பாக அன்னை தெரசா பற்றி, மேற்கு வங்கத்தின் முதலமைச்சராக இருந்த பி.சி ராய் அவர்கள், அவருடைய பிறந்த நாளின்போது சுட்டிக்காட்டிய ஒரேயொரு வாசகத்தைமட்டும் இங்கே நான் எடுத்துக்காட்டுகின்றேன். பி.சி. ராய் சொல்கிறார், தன்னுடைய பிறந்த நாளின்போது--"இந்தப் பிறந்த நாளில், இந்த முதிய வயதில், முதன் முதலாக யாரைப் பற்றிய நினைவு எனக்கு வந்தது தெரியுமா? நாட்டின் விடுதலைக்காக எந்தத் தலைவரோடு ஒன்றி நின்று போராடினேனோ, அந்த என் அருமைத் தலைவர் மகாத்மா காந்தியடிகளின் நினைவு கூட எனக்கு வரவில்லை; என் அருமைத் தோழர், உயிருக்கு உயிரான தோழர் ஜவஹர்லால் நேருவின் நினைவு கூட என் நெஞ்சில் ஏறவில்லை; எனக்கு நெருக்கமான உற்றார் உறவினருடைய நினைவு கூட எனக்கு வரவில்லை; ஆனால், எனது அலுவலகத்திற்குச் செல்லும் மாடிப்படிகளில் நான் காலடி வைத்து ஏறும்போது ஒரேயொரு எளிய உருவம் வந்ததே; அதுதான் என் நெஞ்சம் முழுவதும் நிறைந்திருந்தது. அந்த உருவம், திக்கற்ற ஏழைகளையும், நோயாளிகளையும், குழந்தைகளையும் காப்பாற்றுவதற்காக, அவர்களுடைய கண்ணீரைத் துடைப்பதற்காக தம் வாழ்வையே ஒப்படைத்துக்கொண்டு, அல்லும் பகலும் அயராது உழைக்கின்ற தெரசாவின் மெலிந்த உருவம்"-- என்று முதுபெரும் தலைவர்களில் ஒருவரான பி.சி. ராய் அவர்கள், அவருடைய பிறந்த நாளில் இப்படிக் கூறியிருக்கின்றார்.

அந்த அன்னையார் அவர்களை இழந்து உலகமே துக்கத்தில் ஆழ்ந்திருக்கின்றது. தமிழகத்தைப் பொறுத்தவரையில், தங்கபாண்டியனை இழந்து தமிழகமே தாளாத துயரத்திலே ஆழ்ந்து இருக்கின்றது. தங்கவேலை இழந்து குன்னூர் தொகுதி மக்கள் ஆழ்ந்த துயரத்திலே குமுறிக் கொண்டிருக்கின்றார்கள். அந்தக் குடும்பங்களுக்கும், இவர்களை ஏற்றிப் போற்றி வாழ்ந்த இந்தியப் பெருமக்கள், தமிழகப் பெருமக்கள் அனைவருக்கும் இந்த அவையின் சார்பில் எடுத்துச் சொல்லப்பட்ட பல்வேறு இரங்கல் செய்திகளோடு என்னுடைய இரங்கல் செய்தியையும் இணைத்து அமைகின்றேன், வணக்கம்.